# ஆத்மஜோதி.



"செல்வ மென்பது சிந்தையி னிறைவே
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே"


| | | |
|---|---|---|
| சோதி 1 | விரோதி௵ ஆவணி௴. | சுடர் 8 |

# ஆத்ம ஜோதி.

## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | குமரகுருபரசுவாமிகள் தோத்திரம் | 217 |
| 2 | நற்றவத்........... | 218 |
| 3 | குமரகுருபரசுவாமிகள் | 219 |
| 4 | சத்சங்கத்தின் அத்தியாவசியம் | 222 |
| 5 | சாதகர்க்குத் துணை | 225 |
| 6 | குரு | 226 |
| 7 | கந்தரனுபூதி | 228 |
| 8 | நமது ஆலயங்கள் | 230 |
| 9 | பிள்ளைத்தமிழ் | 233 |
| 10 | திருக்கேதீஸ்வரநாதர் தோத்திரம் | 236 |
| 11 | திருக்கேதீஸ்வர கௌரியம்மை தோத்திரம் | 236 |
| 12 | ஸ்திரீகளிடம்...........மனப்பான்மை | 237 |
| 13 | பொதுநலத்தின் மாண்பு | 239 |
| 14 | மனப்பயிற்சி | 240 |
| 15 | மௌனம் | 242 |
| 16 | கடவுளை நம்பு | 243 |
| 17 | திருவடியாத்திரை | 244 |
| 18 | திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி | 246 |
| 19 | செய்தித்திரட்டு | 247 |
| 20 | வந்தவள் யார்? | 248 |



'ஆத்ம ஜோதி' ஓர் ஆத்மீக மாத வெளியீடு.

கௌரவ ஆசிரியர்; க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்; நா. முத்தையா

விலாசம்:
'ஆத்ம ஜோதி' நிலையம்,
நாவலப்பிட்டி. (சிலோன்).

சந்தா விபரம்:
ஒரு வருடம் ரூ. 3/- ஆயுள்சந்தா ரூ. 75/-
தனிப்பிரதி சதம் 30.


ஓம்

# ஆத்ம ஜோதி.

உள்ளத்தான் ஓங்கு முலகத்தான் பேரின்ப
வெள்ளத்தான் விண்ணின் விளக்கு.

—சுத்தானந்தர்


சோதி 1 | விரோதி௵ ஆவணி௴ | சுடர் 8


## குமரகுருபரசுவாமிகள் தோத்திரம்.

—:—:—

செந்திலம் பதிமேவு கந்தனது கிருபையால்
சிவகாமி பெற்ற பாலா!
சண்முக சிகாமணிக் கவிராயர் போற்றியே
சீருடன் வளர்த்த சீலா!
ஐந்துவய சதனிலே அறுமுகனின் அழகுகண்
டருட்குமர குரு வாயினை
அங்கயற் கண்ணிவந் தன்புட னளித்திட்ட
ஆரமணி திரு மார்பனே! [யில்
செந்தேன் வடிந்தொழுகும் பொழில்சூழ்ந்த காசி
சிவத்தொண்டு பல ஆற்றினை
செப்பரிய சித்திபல செய்தயல் மதத்தருமுன்
சீரடிகள் பணிய வைத்தாய்
பைந்தமிழ்ச் சோலையிற் பழகுவோர் பயன்பெறப்
பலஅரிய நூல்கள் தந்தாய்
பரமபத மடைவதற் கரியநெறி காட்டுமெம்
பகவனே! பரமகுருவே!

—க. இ.

ஓம்

**நற்றவத் தொண்டர் கூட்டம்**
**பெற்றவர்க்குண்டோ பெறத்தகாதனவே.**

உள்ளே வஞ்சகம் நிறைந்த நெஞ்சனாயினும் வெளியே தவவேடந்தாங்கி பொன்னம்பலத்தில் நின் திருநடங்கும்பிட்டு உய்ந்துவிட்டேன், உய்வதற்குரிய தவம் ஒன்றும் செய்யாது எளிதில் உய்வடைந்தவிதம் எவ்வாறெனில், கூடாவொழுக்கம் பூண்டோனாயினும் எடுத்துக்கொண்ட தவவேடத்திற்குப் பொருந்த நின் அடியார்களோடு பழகுவதிலே, அவர்கள் என் வேடத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் நின் தன்மை என்னிடத்தே இருப்பதாய் பலநாள் எண்ணினமையால் அவர்களின் பாவனை நாளடைவில் முதிர்ச்சியாகி அதின் பயனை அடியேன் பெரும் பேறெய்தினேன். அடியார்கள் உன்னை எவ்விடத்தில் இருப்பதாய் கருதுகிறார்களோ அவ்விடத்தில் நீ இருக்கின்றாயென்பதற்கு ஐயமில்லை. ஆதலின் மெய்ப்பொருள் பொய்ப்பொருள் இன்னவென்று உறுதியாக உள்ளத்திற்கொண்டு, புல்லறிவுநீக்கி, நல்லறிவு புகட்டி எம்போன்றவர்களையும் அறநெறிச்செலுத்தி செம்மைசெய்தருளத் திருவுருக்கொண்ட நற்றவத்தொண்டர் கூட்டம் பெற்றவர்க்குப் பெறலாகாதவை உளவோ!

—குமரகுருபரசுவாமிகள்

(சிதம்பரமும் மணிக்கோவை 10ம் பாட்டின் பொழிப்புரை.)

# குமரகுருபரசுவாமிகள்.

—:-:—:-:—

[ஆசிரியர்]

முற்காலத்தில் தமிழ் நாட்டில் தோன்றி அகில இந்தியாப் புகழ்படைத்தவர்களுள் மூவர் முக்கிய இடம் பெற்றிருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் அரசவம்சத்தினர்; மற்றைய இருவர் சமயாசாரியர்கள். ஆத்திமாலையணிந்து, புலிக்கொடியுயர்த்தி, அறம் வளர்த்து, குமரிமுதல் இமயம்வரை விரிந்த செந்தமிழ்ச் சாம்ராஜ்யத்தை நிலைநாட்டிய பெருமை கரிகால்வளவனைச் சேர்ந்தது இதேமுறையில், ஆத்மீகத்துறையில் தெந்நாட்டுக்கு என்றுங் குன்றாத பெரும்புகழைத் தேடிவைத்தவர்கள் சங்கரரும் குமரகுருபரசுவாமியுமாவர். சங்கரர் காவியணிந்து, வேதாந்தக்கொடியுயர்த்தி அத்துவித நெறிவிளக்கி பாரதநாட்டின் நாற்றிசைகளிலும் மடங்கள் நிறுவினர். எமது புராதன இந்துமதம் மறுமலர்ச்சிபெற்றுத் துலங்கியது அவரது அற்புத சக்தியும் அபார முயற்சியுங் காரணமாகவேயாம். அவர் பிறந்த கேரளம் அக்காலத்துத் தமிழ் நாட்டின் ஓர் பாகமேயாம். அவருக்குப்பின் தென்னாட்டுச் சிவஞானப் பொக்கிஷத்தை வடநாட்டார்க்கு வாரியிறைத்தவர் குமரகுருபரர் ஒருவரே. இவர்கள் இருவர்க்குமிடையே தோன்றிய வைஷ்ணவ ஆசாரியரான ஸ்ரீ ராமானுஜரின் சமயத்தொண்டு தமிழ் நாட்டின் வடக்கு மேற்கு இரு எல்லைகளைத் தாண்டியபோதிலும், அது காசிப்பக்கத்தையோ இமயமலைச் சாரலையோ எட்டவில்லை. ஏனைய தெந்நாட்டுத் தவப்புதல்வர்களான நாயன்மார்கள், ஆழ்வார்கள், சமயாசாரியர்கள், சந்தானாசாரியர்கள் முதலியோர்களின் தெய்வப்பணி அவர்கள் காலத்தில் தமிழ்மொழிவழங்கும் நாட்டின் எல்லை கட்கப்பாற செல்லவில்லை. அக்காரணம்பற்றியே அவர்களின் திருநாமங்களைத்தானும் வடநாட்டார் பலர் இன்னும் அறியாமல் இருக்கின்றனர். இந்த உண்மையை முதலில் உணர்ந்துகொண்டால்தான், குமரகுருபரசுவாமிகள் புரிந்துள்ள அரிய தமிழ்த் தொண்டினது சிறப்பையும், சைவப்பணியின் மகிமையையும் யாம் சிறிதாவது விளங்கமுடியும். அவர் தோன்றியிராதிருப்பின், சம்பந்தர், சுந்தரர், சேக்கிழார், கம்பர், அருணகிரிநாதர் போன்ற மகான்களின் நாமங்களையே வடஇந்தியர்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டார்களெனத் தயங்காமற் கூறலாம். இற்றைக்கு முந்நூறு வருஷங்கட்குமுன் வாழ்ந்துபோன இப்பெரியாரின் வரலாற்றை

தமிழ் நாட்டில் இன்று எத்தனைபேர் அறிவார்கள்? சைவர்களுள் எத்தனைபேர் அவர் அருளியுள்ள அரிய பிரபந்தங்களின் பெயர்களைத்தானும் கேள்விப்பட்டுள்ளனர்? காசியில் அவர் நடாத்திய கம்பராமாயணவகுப்பின் பயனாகவே கீழ்நாடும் மேல்நாடும் போற்றும் துளசிதாஸர் ராமாயணம் தோன்றியதென்ற உண்மை எத்தனை தமிழர்கட்குத்தெரியும்? அக்குமாலை அணிந்து, நமசிவாயக்கொடி உயர்த்தி, வைஷ்ணவர்களையும் இஸ்லாமியர்களையும் தமது அடிபணியவைத்து, சைவநெறி தழைத்தோங்கச்செய்த இந்தப் பரமபுருஷனின் வரலாற்றைச் சிறிது ஆராய்வோம்.

பாண்டியர்களும் சோழர்களும் செய்த பல தவறுதல்களாலும், அவர்கட்கிடையே அடிக்கடி நடந்த உட்சண்டைகளாலும் தமிழ் நாடு மிகவும் தாழ்வடைந்திருந்தகாலம் பதினாறும் நூற்றாண்டு. 1557 இல் வீரசேகரசோழன் மதுரையைக் கைப்பற்ற, அங்கிருந்தரசாண்ட சந்திரசேகரபாண்டியன் விஜயநகர் மன்னனிடம் அடைக்கலம் புகுந்தனன். அந்த அரசன் உதவிக்காக அனுப்பிய சேனைத்தலைவனான நாகம நாயக்கன் சோழனை வென்று பாண்டியனை ஏமாற்றி மதுரை ராஜ்யத்தைத் தனதாக்கிக்கொண்டனன். இந்தமுறையில் பாண்டிநாட்டை ஆள ஆரம்பித்த நாயக வம்சம் விஜயநகர சாம்ராஜ்யத்தைப் பின்பற்றி வைஷ்ணவமதத்தை ஆதரித்தது. அக்கால வைஷ்ணவ மறுமலர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் மஹாராஷ்டிரத்தில் தோன்றிய ஏகநாதர் என்னும் மகானும், மத்தியமாகாணத்தைச்சேர்ந்த றெயிப்பூரில் அவதரித்த வல்லபாசாரியருமாவர். பிந்தியவரே விஜயநகர் மன்னனான கிருஷ்ணதேவனின் (1501—30) சபையில் சமயவாதங்களில் எல்லோரையும் வென்று வைஷ்ணவாசாரியாரென்னும் பட்டம் பெற்றவர். வடக்கே துலுக்கர் ஆட்சியும் வலுப்பெற்றிருந்தபடியால், அவர்களின் படையெடுப்போடு தெந்நாட்டில் இஸ்லாமியமும் பரவத்தொடங்கியது. அத்தோடு, வியாபாரத்திற்சாக ஐரோப்பாவிலிருந்துவந்து தூத்துக்குடியில் குடியேறிய போர்த்துக்கீசரும் திருநெல்வேலிப்பிரிவின் கரையோரமாக வசித்த மக்களைத் தங்கள் கத்தோலிக்க மதத்தில் சேர்த்துவந்தனர். இந்தநிலையில் சைவநெறி ஆதரிக்க அரசில்லாமையால் தன் பழைய செல்வாக்கை முற்றிலுமிழந்துவிட்டது; சைவக்கோயில்கள் இருளடைந்தன. அப்பர் சம்பந்தர் காலத்திலோ அல்லது மாணிக்க



வாசகர் சங்கரர் காலத்திலோ சிவமதம் இந்தவிதமான பல இடைஞ்சல்களால் இடர்ப்பட்டதெனச் சொல்லமுடியாது. நலிவுற்ற சிவநெறியைத் திரும்பவும் செந்நெறியாக விளக்கத்தக்க ஓர் மகாபுருஷன் தோன்றாரோவெனச் சைவ நன் மக்கள் பரமசிவனை வேண்டிநின்றனர். அப்போது செந்தமிழ் தழைக்கவுஞ் சிவநெறி சிறப்புற்றோங்கவுந் தோன்றியவரே குமரகுருபரஅடிகளாவர். அவரது காலம் கி. பி. 1625—1688. அவர் பிறந்தவூர் பொருநைக்கரையிலுள்ளது. அதைச் சைவர்கள் திருக்கைலையெனவும் வைஷ்ணவர்கள் வைகுந்தமெனவும் அழைக்கின்றனர். இப்பதியிலிருந்து திருநெல்வேலி மேற்கே பதினெட்டு மைல் தூரத்திலும், திருச்செந்தூர் பதினெட்டுமைலுக்கப்பால் கடலோரத்திலும் நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூர் மூன்றுமைல் கிழக்கேயுமுள்ளன. இவர் தந்தைபெயர் சண்முகச்சிகாமணிக் கவிராயர்; தாயார் சிவகாமியம்மையார். செந்தூர் முருகனிடந் தவங்கிடந்து பெற்ற அருமைக் குழந்தை. ஐந்துவயசுவரைக்கும் ஊமையாக இருந்தமையால் பொறுக்கொணாக் கவலையுடன் இருவரும் அப்பெருமானிடமே குழந்தையை அழைத்துச்சென்று அவர் சந்நிதானத்தில் கடுந்தவஞ்செய்தனர், ஒருநாள் நடு நிசியில் முருகப்பெருமான் அழகிய குமார வடிவில் குழந்தைக்குக் காட்சி அளித்து 'குமரகுருபர' என அழைத்து வாச்சருளி மறைந்தனர். பின்னர் குழந்தை பெற்றோர் கழிபேருவகை பூத்துநிற்ப, சைவசித்தாந்த சாஸ்திரத்தின் சாரமாய் போற்றப்படும் 'கந்தர் கலிவெண்பா' என்னுந் தோத்திரப்பாடலை யருளிச்செய்தனர். சைவ நன் மக்களால் பிணி நீக்கம் வேண்டியும் கல்வி வரங்கேட்டும் இக்கலிவெண்பா தென்னாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் இன்றும் பாராயணஞ்செய்யப்பட்டுவருகின்றது.

குமரகுருபரரின் உள்ளத்தில் ஞானகுருவை அடையவேண்டுமென்ற வாஞ்சை குடிகொண்டது. அதைக்குறித்து முருகப்பெருமானிடமே விண்ணப்பஞ்செய்தனர். 'வடதிசையிற் செல்லுங்கால் உன்வாக்கு எவர்பால் தடைப்படுமோ அவரே உனக்கு ஞானகுரு' என அசரீரியாய் அருளிச்செய்தனர் நஞ்செந்தில்மேய வள்ளிமணாளனார். அதன்பின் பிறந்தவூர் திரும்பி அங்கு எழுந்தருளியிருக்கும் கைலாயநாதர்மீது கைலைக்கலம்பகம் பாடியருளினார். பெற்றோரின் விடைபெற்று வடநாட்டுயாத்திரை செய்யும் வழியில்

மதுரையில் தங்கி 'மீனாக்ஷி பிள்ளைத்தமிழ்' பாடியருளினார். இப்பிரபந்தம் திருமலை நாயக்கன் முன்னிலையில் அம்பாள் சந்நிதியில் அரங்கேற்றப்பட்டது. அப்பிரபந்தத்தின் வருகைப்பருவத்தின் ஒன்பதாவது செய்யுளாகிய 'தொடுக்குங் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே' என்று ஆரம்பிக்கும் பாடலுக்கு குமரகுருபரர் பொருளுரைக்கும்போது அங்கயற்கண்ணி அர்ச்சகர் மகளாகத் திருக்கோலங்கொண்டு அரசன் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றிச் சுவாமிகளின் கழுத்திலிட்டு மறைந்தருளினார். இந்த அருட்செயலைக் கண்ணுற்ற மன்னன் அடிகள் பெருமையை உணர்ந்து அவரை செம்பொன் அரியணைமீதெழுந்தருளச்செய்து, தனது வீரக்கழலை அவர் திருவடிகளிற்சாத்திப் பூசித்தனன். சம்பந்தப்பெருமானுக்குப்போல் சிவிகை, சின்னம் முதிலியனவும் அளிக்கப்பட்டன. அடிகள் மதுரையிலிருந்து வடதிசைநோக்கி வழியிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு தருமபுரவாதீனத்தை அடைந்தனர். அப்போது ஆதீனத்தலைவராயிருந்த மாசிலாமணி தேசிகர் அடிகளைநோக்கி, 'ஐந்துபேரறிவு' என்னும் பெரிய புராணப்பாடலுக்கு அனுபவப்பொருளை வினவினார். அடிகளுக்கு வாக்குத்தடைப்படவே, செந்தூர்க்கந்தன் குறித்த ஞானாசிரியர் மாசிலாமணி தேசிகரே என உணர்ந்து அவர்பால் உபதேசம்பெற்றனர். குரு கோவிந்தரை நர்மதை ஆற்றங்கரையில் சந்தித்து உபதேசம்பெற்ற சங்கரருக்கு காசிசெல்லுமாறு கட்டளை கிடைத்ததுபோலவே, குமரகுருபரருக்கும் காசிசென்று 'சிவத்தொண்டு புரியவேண்டுமென்ற கட்டளை' மாசிலாமணிதேசிகரிடமிருந்து கிடைத்தது.

குருநாதர் கட்டளையைச் சிரமேற்கொண்டு, திருக்காளத்தி, திருவேகம்பம் முதலாய தலங்களைத் தரிசித்துக்கொண்டு காசியம்பதியை அடைந்த அடிகள்

"ஆனந்தமுயிர்களெய்தஆனந்தவல்லியோடும்
ஆனந்தமகார்களோடும்ஆனந்தவனத்துமேய
ஆனந்தவடிவார்தம்மையானந்தச்செய்யுள்பாடி
ஆனந்தம்பயப்பப்போற்றிஆனந்தமெய்துநாளில்"

அங்கே தம்மைக் கருவியாகக்கொண்டு காசிவிஸ்வநாதர் செய்தருளப்போகும் பலவித சிவத்தொண்டுகளைப்பற்றிச் சிந்திக்கலானார். ஐந்தாம் வயசில் செந்தூர் முருகனிடம், 'எழுத்து முதலாமைந்தி

# சத்சங்கத்தின் அத்தியாவசியம்.

———:—:———

(டக்டர் முகம்மத் ஹபீஸ் ஸையத்)

[ஆங்கிலத்தில் 'கல்யாணக் ஹல்பத்தரு'வில் வெளிவந்த கட்டுரையின் மொழிபெயர்ப்பு].

'மனதினால் எண்ணும் எண்ணமனைத்தும் சத்திய சொரூபமாகவேயிருக்கவேண்டும். நாவினால் சொல்லும் சொற்களனைத்தும் சத்தியமொழிகளாக இருக்கவேண்டும். செய்யும் செயலனைத்தும் சத்தியகருமங்களாக இருக்கவேண்டும். இம்மாதிரி தவம் செய்வோர்கட்கு சத்தியதேவி பிரசன்னமாகவே செய்வள்' என்று ஸ்ரீமதி அன்னி பெஸண்டம்மையார் கூறியுள்ளார்.

மேற்சொன்ன வாழ்க்கைக்கு சத்சங்கம் என்பது இன்றியமையாத விஷயமாகும். ஆகையால், சன்மார்க்கத்துறையிலும், ஆத்மீக வாழ்விலும் ஈடுபட்டிருக்கும் பக்தர்கள் சத்சங்க உறவைத் தேடிக்கொள்ளவேண்டும். ஹிந்து, புத்த, சமணசாஸ்திரங்கள் சத்சங்கத்தின் மகத்துவத்தைப்பற்றிப் பிரமாதமாகக் கூறியுள்ளன. பொதுவாக, சர்வசமய நூல்களும் சத்சங்கத்தை ஆத்மீக பாவனைக்கு ஒரு பிரதான அங்கமாகக் கருதுகின்றன. இப்பேர்ப்பட்ட

முற்பக்கத்தொடர்ச்சி.

லக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப்புலமை' பெற்ற அடிகளுக்கு இந்துஸ்தான மொழிப்பயிற்சி ஓர் பெருங்காரியமல்லவே. அம்மொழி கைவரும் வண்ணம், 'பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற்பனுவலும் யான், எண்ணும் பொழுதெளிதெய்தநல்காய்' என்று சரஸ்வதிமீது பதிகம்பாடினார். அத்தேவி அந்த வரத்தைக்கொடுத்து, "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்" அவரின் பண்கண்ட அளவிற் பணியவுஞ் செய்தனர். இந்தமுறையில் அடிகள் அப்போது டில்லியிலிருந்து வடநாட்டை ஆண்ட அவுரங்க சீப்பினதும் (1658—1707) அவனது பிரதிநிதியாகக் காசிப்பிரிவை அரசாட்சிசெய்த நவாப்பினதும் நன்மதிப்புக்குரியரானார். அவர்கட்குமுன் உயிருள்ள சிங்கத்தின்மேலிவர்ந்து அவர் சென்ற காட்சிப்படமே இச்சுடரின் முன் அட்டையை அலங்கரிக்கின்றது. காசியிலும் அதற்கு அப்பாலாய இடங்களிலும் அவர் புரிந்த அறங்களைப்பற்றியும் அவர் அருளியுள்ள பிரபந்தங்களின் சிறப்பைக்குறித்தும் அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

———

சத்சங்கத்தை நாம் தேடிக்கொள்வதற்குமுன், அதில் சேர்வதற்கு யோக்கியதை உள்ளவர்களாக நம்மை நாம் ஆக்கிக்கொள்ளவேண்டும். இந்தத் தயாரிப்புக்குமுன், இந்த உலகவாழ்க்கையைக்குறித்தும், அதில் நாம் அனுபவிக்க விரும்பும் இன்பங்களைக் குறித்தும், அந்த இன்பங்கள் நம்முடைய மனதிற்கு பரிபூரணமான திருப்தியை உண்டாக்கக்கூடியவைகளா என்பதைப்பற்றியும், நாம் ஆராய்ச்சிசெய்து பார்க்கவேண்டும்.

இந்த உலகத்தில் நாம் காணும் இன்பங்களில் எதுவும் நமக்குப் பூரணமான திருப்தியைத்தரும் சக்திவாய்ந்ததில்லையென்பது நிதர்சனம். ஆகவே, நமக்கு பரிபூரண திருப்தியைக் கொடுக்கக்கூடிய வஸ்து எது என்பதைத் தேடிக் கண்டுபிடித்தல் நம் கடமையாகும். நமது முன்னோர்கள் "இன்பத்தை வெளியுலகத்தில் தேடுவதில் காலத்தை வீணாக்காதே; உன் உள்ளத்தில் தேடிப் பார். அங்கேதான் இருக்கிறது யதார்த்தமான இன்பம்." எனச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நாம் இந்தஆராய்ச்சியை முதலில் செய்துபார்க்கவேண்டும்.

உள்ளத்தை ஆராய்ச்சி செய்வது மிகவும் சிரமமானகாரியம். அதற்கு மனோதிடம் வேண்டும். நம்முடைய மனமோ சதா அலைந்துகொண்டிருக்கும் தன்மைவாய்ந்தது. இவ்வித மனதை எவ்விதம் அடக்குவது? மனதை அடக்குவதற்குச் சில சாதனைகள் செய்யவேண்டும் நாம் இதுவரையில் நாம் அனுஷ்டானத்தில் வைத்திருந்த ஆசாரங்களையும், பழக்கங்களைலம், சுபாவங்களையும் மாற்றிக்கொண்டு புது அனுஷ்டானங்களைக் கையாளவேண்டும். இந்த மாற்றத்தில் துணைபுரியத்தான், சத்சங்கம் வேண்டப்படுகிறது. அது ஏற்பட்டால், புதிய முறைகளைக் கையாண்டு ஆத்மீக வாழ்வில் முன்னேறிச் செல்லுதல் மிகவும் எளிதான, லெகுவான வேலையாய் மாறிவிடுகிறது.

[சாந்தி, விசாரம், சந்தோஷம், சத்சங்கம், என்ற நால்வருமே மோட்சவாசலின் காவற்காரர்கள். அவர்களுள் ஒருவரின் உறவுகிடைத்தால் ஏனைய மூவரின் உதவி எளிதில் வரும்.]
—ஞானவாசிட்டம்.

---

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

## — சாதகர்க்குத் துணை. —

—;—;—

சுவாமி ஸ்ரீ ராமதாஸ் அவர்களின் ஆங்கில நூல்களில் இருந்த இரட்டிய (Guide to Aspironts) என்னும் நூலின் மொழிபெயர்ப்பு.

(மொழிபெயர்ப்பு—விசாகர்)

### உள்ளிருந்தேமாற்றம்.

வெறும் புறத்துறவு அனுவசியம் என்பதோடல்லாது அது வழியுமாகாது.

உள்ளமைதியைவேண்டி, தனதுவெளிவாழ்விலுஞ் சூழலிலும் மனிதன் எந்த மாற்றத்தையுஞ் செய்யலாம். ஆனால், உலகம் முழுவதுஞ் சுற்றி, அவ்வமைதியைப் பெறுவதற்காக உகந்த சுற்றாடலைத் தேடியும் அது கிட்டாமை ஆயிரக்கணக்கானவர்களின் திடமான அனுபவம். ஏனெனில் மாற்றம் உள்ளிருந்தே-உள் நோக்கில் இருந்தே.

"உள்ளேநோக்கு-உன்னை அறி" இந்த உன்னத இரகசியக் குறிப்புகள் பண்டைய ரிஷிகள் வாக்கிலிருந்து காலப்போக்கில் எமக்குக் கிடைக்கின்றன.

குறித்த வெளிநிலையினாலோ சந்தர்ப்பத்தாலோ மோட்சம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. தெய்வீகஞானம்பெற்று அறியாமையை அகற்றி இறவாமையை அடைதலே மோட்சம். எமது உள்உணர்விலும் நோக்கிலும் முதன்மையாக ஓர் மாற்றமே அது. அறியாமைக்காலத்தில் ஒரு குறித்த தரத்தில் வைக்கப்பட்ட ஒருவன் தெய்வீக ஞானம் பெற்ற பின்னும் அதே தரத்திலேதான் இருத்தலுங்கூடும்.

சந்நியாசம் என்பது இன்னொருவர் உன்மேல் சுமத்தக்கூடியதோ அல்லது உனக்குப் பயிற்றக்கூடியதோ அல்ல, தலையை மழித்தலுங் காவியணிவதும் சந்நியாசம் ஆகாது. அழியும் உலகப்பொருள்கள்மேலுள்ள ஆசையின் உட்துறவையே அந்நிலை குறிக்கும். மனத்துறவில்லாமல் ஆடையையுந் தோற்றத்தையும் மாத்திரம் மாற்றுவதால் பலனொன்றுமில்லை.

ஆசையெனும் வித்தில் முளைத்த பற்றுதலே முதற்பிழை. இதுவே அஞ்ஞானத்தின் ஆதிகாரணம். ஆசையையும் பற்றுதலையும் அகற்றுதலே விடுதலையெனப்படும்.

---

சென்றஇதழ்த் தொடர்ச்சி:

# — குரு. —

—:—:—

[சாது ஸ்ரீ முருகதாஸ்]

"முருகன் தனிவேல் முனிநம் குருவென்று
அருள் கொண்டு அறியார் அறியுந்தரமோ
உருவன்(று) அருவன்(று) உளதன்(று) இலதன்(று)
இருளன்(று) ஒளியன்(று) என நின்றதுவே."

[குருபுங்கவன்]

என்றபடி எங்கெங்கும் அவன் அருள் மொழிகேட்டு அதையுணர்ந்து

சரணடைந்தார் செய்குற்றம் சிறிதும் எண்ணிப் பாராக்
குருநாதா, சேவைவேண்டா தன்பு வேண்டும் நாதா
காரணநிலை உலகநிலை கடத்தி என்னை யுன்னுள்
பூரணநிலை தனில்வைத்து ஆளும் புண்ய ரூபா

என்று வாடி நெக்குருகி ஆடும்போது. குருநாதன் வருவான். வந்து அபிமானத்தால் வளர்க்கப்பட்ட தேகத்தையும் அறிவையும் அன்பாகப்பட்ட குளிர்ந்த ஒளியிலே ஆனந்தமாகத் தாக்கக் கலப்பின்றி ஓடச்செய்து எவ்வித முயற்சியாலும் கைகூடுவதற்கரிதாகவும் நினைப்பதற்கும் அரிதான ஓர் ஒப்பற்ற உண்மையை அடையத்தருவான்.

எவ்வித எதிர்பார்ப்புமின்றி எல்லையற்ற அமைதி நிலையை தந்ததோடன்றி அதற்கு விரோதமான அஞ்ஞான சக்திகள்தோன்றி இடையூறும் செய்யாவண்ணம்

"இடத்தும் ஒருவலத்தும் இருபுறத்தும் அருகடுத்து
இரவு பகற் றுணையதாகி"

எல்லாத்திக்குக்கும் எல்லா இடத்துக்கும் தலைவனை தனியா அதிமோக தயாநிலையான அமைதிநிலை நிற்க தானும் காவல்காத்து நிற்பான். என்னே குருநாதன் கருணை! என்னே அவன் அருட்தன்மை! இனி அவன் திருவடியான அன்பை நான் மறவேன்.

"அரசாகி வாழினும் வறுமை கூரினும் நினது
வார்கழ லொழிய மொழியேன்"

"குருநாதா நீதந்த பேரருள் கனவிலும்
நனவிலும் மறவேன்"

(திருப்புகழ்)



"அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே"

யானிதற்கு இலன் ஓர் கைமாறே திருவடியை இனி விடமாட்டேன் என்று சிக்கெனப் பிடித்துக்கொண்டு அதிலேயே வாழவேண்டும்.

இப்படி அழியாத அருளை வரையாது தரும் கருணை உருவே குருவடிவு- ஆனந்த நிலையை அவரவர் நிலைக்குத்தக்கபடி காட்டிக் கொடுக்கத்தோன்றிய குருமார்களே நம் கண்முன் இருந்த, இருக்கிற. இனிவரப்போகிற மனிதவடிவு தாங்கிய ஞானிகள்.

"நல்லா ரிணக்கம் நற்குரு வளிக்கும்
நற்குரு வடிவம் நல்வழி வளிக்கும்
நல்வழி வளிக்கும் நல்நிலை யதனை
நல்நிலை யதனில் நாசின்றி வாழ்வாம்"

ஆகவே குருவடிவே உருவழிபாடுகள் செய்யும் அனைவற்கும் சக்தி, பக்தி, சித்தி, முத்தி கொடுக்க வல்லவர் முதலும் நடுவும் அந்தமுமாய் நின்ற குருவை வணங்கி அருள்பெறுவதே மனிதப் பிறப்பின்நோக்கம்.

பாபத்தால் சேர்க்கப்பட்ட பொருட்களை யுண்டுவளர்ந்து ஏமாற்றுக்களுக்கு இரையாகி துக்கப்படும் நம்மை கரையேற்றத் தோன்றிய மேற்சொன்ன குருவடிவங்களில் ஒன்றுதான் ஆனந்தாஸ்ரமத்தில் ஆனந்தமாக அமைதிநிலையைப் புன்சிரிப்பாலும் அமுதமொழியாலும் பேசி அருள் தரும் ராமதாசர். ஏழைகளின் சேவை எவ்வளவு இன்பம்தரும் என்பதை எடுத்துக்காட்டும் ராமநகரவாசி. அவர் அனைவர்க்கும் தரும் தாரகநாமரசமுண்டு அழியா அமைதி பெறுவோம் வாருங்கள். அவர் அருளால் நம் முன் பிரகாசிக்கும் ஆத்ம ஜோதியால் எங்கும் அமைதியைக்கண்டு இன்புறுவோம் வாருங்கள்.

ஓம் குருநாதா சரணம் சரணம்.

# — கந்தரனுபூதி. —

—;—:—:—:—

(சாது ஸ்ரீ முருகதாஸ்)

## மனத்திற்குபதேசம்

யாமோ தியகல் வியுமெம் மறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

"நான் இதுவரை கற்றேன்" என்று சொல்லும் கல்வியும் அதனால் ஏற்படும் பகுத்தறிவும் மேன்மையும் கற்ற கல்வியால் திருப்புகழ் மாலைகள் புனைந்து சாற்றி, அறிவால் அகில லோக காரணனை தன்னை உணர்ந்து என்றும் வாழ்த்துவதற்காகவுமே ஞான சத்தியான வேல் தாங்கிய முருகனால் நமக்குக் கொடுக்கப்பட்டது. ஆகையால் கல்வியையும் அறிவையும் உலக ஜீவர்களுக்கும் பொருளுக்கும் ஆசை வைத்து வீணாக்கும் செய்கையை அறவே ஒழித்து முருகனது குணங்களான ராஜபாதையின்மீது நாக்கான கால்களைக்கொண்டு, கல்வி யறிவாகிய கோல் ஊன்றி நடந்து வாருங்கள், நடவுங்கள். இப்பாதை நிச்சயமாய் நம்மை அழியா ஆனந்தத்துடன் சேர்த்துவிடும். அதைச் சேர்ந்து, இன்ப மடைய "நாமேல் நடவீர் நடவீரினியே." கல்வி அறிவும் தாமே பெற வேலவர் தந்தது."

### குறிப்பு.

உலகத்திடை கொண்ட அளவற்ற ஆசையும் நமக்குள்ள கல்வியும் அறிவும் செல்வமும் நாம் செய்யும் முயற்சியாலும் கெட்டிக்காரத் தனத்தாலும் வந்தது என்ற அகங்கார எண்ணம் தான் நம் துக்கத்திற்குக் காரணம்



இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் நம்மையும் சுற்றியுள்ள பொருள்களையும் அளித்த ஆண்டவனை மறந்ததேயாம். இனி என்றும் இன்பமடைய "யான்" "எனது" என்ற அகந்தை விமானமேறி யாத்திரை செய்யாமல் எல்லாவற்றையும் நமக்குத் தந்து நம்முள்ளும் புறமும் நின்ற அதை அனுபவிக்க எண்ணிய திருமுருகனின் குணங்களான சாலைமீது நாக்கான கால்களால் நடந்து உலக ஆசைகளான காடுகளையெல்லாம் கடந்து சாந்தி நாடடைந்து நாயகனை மன்னனை அணைந்து ஆனந்தித்து இல்லாமலே என்றும் இருக்க "பூமேன் மயல்போயற மெய்யுணர்"வோம்.

❋ ❋ ❋ ❋

௨ கெடுவாய் மனனே கதிகேள் கரவா
இடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே

ஏ மனமே! நீ வீணாகக் கெட்டுப் போகாதே! நீ அடைய வேண்டிய ஆனந்தத்திற்கு என் மொழியைக்கேள். இறைவன் அளித்த பொருள்களை சிறிதும் லோபமின்றி ஏற்பவருக்கு (யாசிப்பவர்க்கு) கொடுப்பாய் ஞான சக்தியான வேலாயுதம் கொண்ட தெய்வத்தின் மலர்ப் பாதத்தை நினைந்து சாந்தி பெறுவாய். பெற்ற சாந்தியை ஆயுதமாகக் கொண்டு நீண்டு முடிவின்றி உன்னை வாட்டும் துன்பங்களை சுட்டு சாம்பலாக்கி விடு. வினைகளுக்கெல்லாம் மூல காரணமான யான் எனது என்று செய்யும் செயல்களை எல்லாம் இறைவனுக்கே உரியது என்று விடுவாய். இவ்வாறு செய்தால் உனக்கு சாந்தி ஏற்படும். அச்சாந்தியே அனுபூதி. மனமே! அனுபூதி நிலை பெற வடிவேல் இறைதாள் நினைவாய்!

# நமது ஆலயங்கள்.

## அன்றும் இன்றும்.

[சுத்தானந்தர்]

பழமை புதுமை இரண்டையும் நாம் கலைக்கண்ணால் காண வேண்டும். அதன் காலத்திலும் இடத்திலும் வைத்துக் காண வேண்டும். அப்போதே அததன் அருமை பெருமை தெரியும் உதாரணமாக நமது முன்னோர்கள் கலையையே கோயிலாக்கினார்கள். நாம் கோயிலைக் கலையாக்கவேண்டும். இன்று ஸ்ரீரங்கம் போல் இன்னொரு கோயில் கட்டுதல் அரிது. ஆனால் இந்தக் கோயிலையே சீர்திருத்திக் கலாபீடமாக்கலாம். இக்காலத்தில் “கோயில் எதற்கு? அங்கே அர்ச்சகர் தட்சிணையும் உண்டைக் கட்டணச் சண்டையும் தேவதாசிகள் நடனமுமே மிச்சம். எல்லாம் இருள் மூடிக்கிடக்கின்றன. வௌவால்களே இங்கும் அங்கும் அக்ஷதை தாவி நாலு மூலைத் தாவி விளையாடுகின்றன. நமது

முற்பக்கத் தொடர்ச்சி

### குறிப்பு

நாம் எடுக்கும் பலவித ஜென்மங்களுக்கும்
வித்தாயுள்ளது வினையே வினைவளர்
வதற்கு நம்மிடமுள்ள தூக்க எண்ணங்களும்
ஆணவங்கொண்டு திரியும் மனமுமே காரணம்.
அனைத்துக்கும் வித்துப்போன்ற மனக்குரங்
காட்டம் தீர்ந்தால் ஆனந்தமே மிஞ்சும்
ஆகையால்!

அறிவுள்ள ஜீவன் தன் மனத்திற்கு வேதனையையும்
வினையையும் வென்று புனிதமாகும் நிரத்தை ஈஸ்வர
நினைவாலும் புனிதச் செய்கையாலும் அன்புடன்
உபதேசிக்க வேண்டும். மனம் நிம்மதி யடைந்த
சாந்தி நிலையே ஒவ்வொரு ஜீவனும் அடைய
வேண்டிய ஆனந்த நிலை.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய், ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு னக்குச் சொல்கின்றேன் பலகாலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.

(திருவாசகம்)

---



முன்னோர்கள் வேதாகம தர்மத்தையே கோயிலாகக் கட்டி எல்லாருக்கும் தெய்வ உணர்ச்சி பெருகச் செய்தனர். அவர்கள் செதுக்கிய சிற்பங்கள் கல்லிற் பேசுங் காவியங்கள். ஆடல் பாடல் அழகு எல்லாம் நமது கோயிலில் தெய்வச்சுவையேறி விளங்குகின்றன. யோகிகள் தியானக் காட்சியிற் கண்ட தெய்வ சேதன வடிவங்களே நமது விக்கிரகங்கள். அவற்றைக் காணும்போது நாம் கல்லைக்காண்பதில்லை. கல்லிலும் செம்பிலும் பொதிந்து விளங்கும் தெய்வக்கால தத்துவத்தையே கண்டு வணங்குகிறோம். நமது நாட்டு நாகரிகம் இந்த அருட் கோயிலைச் சுற்றியே அமைந்தது. இக்கோயில் தொண்டர்கள் தமது தொண்டின் பயனை இறைவனுக்கே நிவேதிக்கிறார்கள். அருட்பாவலர் தமது வாக்கினால் உள்ளக்கோயிலானை உருக்கமாகப் பாடினர். அந்தப் பாடல்களே நமக்கு அமர காவியங்களாகவும் வாழ்வுக்கு வழிகாட்டும் வேதங்களாகவும் இன்றும் என்றும் உதவுவன. காலக் கோலால் நமது சமுதாயத்தில் பல தீமைகள் படர்ந்தன; நமது கோயிலில் இருள் மேவி அருள் குறைந்து பொருள்வேட்டை அதிகமானது. கோயிலைச்சுற்றி இன்று சாதிமதச் சண்டைகளும் கோட்டு விவகாரங்களும் வலுத்தன. சிற்ப அற்புதங்கள் அழுக்குப்பிடித்து அழகிழந்து மங்கி மழுங்கின. நான் சைவன் ‘நீ வைணவன்’ அவன் வடகலை இவன் தென்கலை என்று நாம் சண்டை போடுகிறோம். காலணா நாமக்கட்டி லட்ச ரூபா கோட்டு விவகாரத்தை இழுத்துவிடுகிறது. நமது நாடும் சமயமும் உருப்படவேண்டுமானால், முதலில் ஒருமையான சமநோக்கம் வேண்டும். ஸ்ரீரங்க கோயிலுக்குச் சிலர் திரு ஆனைக்காவழியே, சிலர் காவிரி தாண்டி, சிலர் சிந்தாமணிப்பாலம் தாண்டி வருகின்றனர். பாதை பல; குறிப்பும் கோயிலும் ஒன்று. சைவம் வைணவம் ஆகிய சமயங்களின் லட்சியம் ஒன்றே. ஒரே பரம்பொருள் அடைவே. சிவனை வணங்கிய திருத்தொண்டரும் திருமாலை வணங்கிய ஆழ்வாராதிகளும் பல வகுப்பினராவர். எல்லாருக்கும் இதயேசனை இறைவன் பொதுப் பொருள்; இந்தச் சமரச உணர்வில்லாது சமயவாதம் பேசுதல் வேரை வெட்டி மரத்திற்கு நீர் வார்ப்பது போலும். ஆன்ம நேய ஒருமையை அடிப்படையாகக் கொண்டுதான் நமது வாழ்வுச் வுச் சோலையில் தத்துவங்கள் செழித்து வளர வேண்டும். சிதம்பரம் நடராஜன் ஆடரங்கம் ஸ்ரீரங்கம் அரங்கநாதப்பெருமாள்

ஆடரங்கம். அவர் சிற்சபையில் ஆடுகிறார். இவர் இதயக் கடலில் குண்டலிப் பாம்பின்மேலே துரியயோகத்திலிருந்து திருவிளையாடல் புரிகிறார். அங்கு நந்தனார் இங்கு திருப்பாணர் முத்திபெற்றனர். முனிவர்கணம் திருக்குலப்பாணரை முதுகில் சுமந்து வந்து சந்நிதானத்தில் விட்டார். பழமையைப் பழங்கண்ணால் நாம் பார்த்துப் புதுமையை புத்துணர்வுடன் வரவேற்போம். சிலர் ரஷ்யாவைக் காப்பியடிக்கப் பார்க்கிறார்கள். ரஷ்யப் பொதுவுடமையை விட நமது தார்மீக வாழ்க்கை சிறந்த பொதுநலமாவது.

எல்லாம் அவனுடைமை எல்லாம் அவனாணை
எல்லாம் அவன் பொதுவென் றெண்

என்றபடி நம்மவர் அருளுடைமையை விளக்கினார்கள். தானதருமங்களால் ஒரு செல்வன் தன் பொருளைப் பலர் வாழப் பங்குவைக்கிறான். கோயில் காணிக்கைப் பணம் பல திருத்தொண்டருக்கும் கலைத்தொண்டருக்கும் பயனாகிறது. கோயில் மணியோசை நமது நாகரீகக் கலையின் ஜயநாதமாயிருக்கிறது. இந்தக்காலம் கோயில் சொத்தைக் கொண்டு சமயக்கல்லூரிகள் அமைக்கலாம். நன்மாணவருக்கு உணவும் கல்வியும் தரலாம். சன்மார்க்க நூல்களை ஏராளமாக அச்சிட்டுத் தரிசனத்திற்கு வருவோருக்கு வழங்கலாம். நம் அருட்செல்வங்களான திவ்யப் பிரபந்தம் தேவாரம், திருவாசகம் முதலியவற்றைப் பாராயணம் செய்யலாம். ஆண்டுதோறும் சாதன வகுப்புகள் நடத்தலாம். தக்க யோகமுனிவரைக் கோயில்கள் ஆதரித்துத் தவம்புரியச் சொல்லலாம். நமது சமுதாயமான வாழ்க்கைக் கோயில்களையும் சீர்திருத்திப் புது வாழ்வு பெறவேண்டும். சாதிமதச்செருக்கு, தீண்டாமை, மடமை; வறுமை, அடிமைத்தனங்களை ஒழித்து நாட்டையே சுத்த சுதந்திர சமத்துவக் கோயிலாக்க வேண்டும். முதலில் உங்கள் வாழ்வில் மனோ, வாக்கு, காயசுத்தமும், ஆத்ம சுதந்தரமும், அன்புச்சமரசமும், நாட்டுங்கள். அவரவர் திருந்தினால் அகிலமும் திருந்தும்.

மனமே

ஓடிவிளையாடும் மனமே—நீ
ஓய்ந்திருக்க லாகாதோ மனமே
கூடிவிளையாடும் மனமே—நீ
புலன்வழிச் செல்லாதே மனமே

"சாதகன்"

# பிள்ளைத்தமிழ்.

—:—:—

[சிவநேசன்]

அமிழ்தினுமினிய தமிழ்மொழியிலுள்ள தொண்ணூற்றாறு விதமான பிரபந்தங்களுள் பிள்ளைத்தமிழ் என்பது ஒன்றாகும். தெய்வங்களையோ, மன்னர்களை அல்லது மகான்களையோ; குழந்தைகளாகப்பாவித்து, அன்புதோன்றப் பாராட்டுவது இப்பிரபந்தத்தின் இலக்கணம். இப்பிரபந்தம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். அவை ஒவ்வொன்றுக்கும் பத்துப் பருவங்கள் உள்ளன. முதல் ஏழுபருவங்களும் இருபாலார்க்கும் பொதுவானவை. குழந்தையைக் காக்கும்படி காத்தற்கடவுளாய திருமால் முதலாந் தெய்வங்களை வேண்டும் முதல்பாகம் காப்புப்பருவமெனவும், கைகளையும் முழந்தாளையும் ஊன்றிக் குழந்தை தவழத்தொடங்கும் பருவம் செங்கீரைப் பருவமெனவும், பெற்றோரதும் உற்றோரதும் தாலாட்டை அது கேட்டு இன்புறும் பருவம் தாலப்பருவமெனவும்; குழந்தை இருக்கப்பழகி இருகைகளையுங் கொட்டி விளையாடுவது சப்பாணிப்பருவமெனவும்; தன்னைப் பிறர் முத்தமிடுவதால் அது மகிழுவது முத்தப்பருவமெனவும், அது தள்ளாடி நடந்து விரும்பினர்பாற்செல்ல விழையும் பருவம் வருகைப்பருவமெனவும், அது சந்திரனோடு விளையாட விரும்புவதானது அம்புலிப் பருவமெனவும் அழைக்கப்படும். இதற்கப்பால் ஆண்பாற் பிள்ளைக் கவியில் சிறுவீடழித்தல், சிறுபறை முழக்குதல், சிறுதேருருட்டுதல்; ஆகிய மூன்று பருவங்களும், பெண்பாற் கவியில் அம்மானை, நீராடல், ஊஞ்சலாடல். ஆகிய மூன்றும் அமைந்துள்ளன. சிறுமியர் கட்டி விளையாடும் மண்வீடுகளை ஆண்குழந்தை அழிப்பதே சிறுவீடழித்தல் பருவமென அழைக்கப்படும். இதில் உன்னதமான தத்துவங்கள் அடங்கியுள்ளன. விளக்கம் பின்வரும்.

குமரகுருபர சுவாமிகளால் இந்த இருவகைப் பிள்ளைத்தமிழ்களும் அருளப்பட்டுள்ளன. ஒன்று உமாதேவியார் மலையத்துவசபாண்டியன் மகளாய்த் தடாதகைப் பிராட்டியாராகத்தோன்றியதைக்குறித்தது; இது மீனாக்ஷியம்மைப் பிள்ளைத்தமிழ்; மற்றையது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ். கந்தபுரியென மறுபெயர்கொண்ட புள்ளிருக்கும் வேளூரில் எழுந்தருளிய முருகப்பெருமான்மீது பாடப்பெற்றது. இவ்விரு பிரபந்தங்களும் எந்தாய்மொழிக்குத் தனிச்சிறப்புத்தரும் முறையில் அமைந்துள்ளன.

பண்டிதர்கட்கு விருந்தாவதுபோலவே பக்தர்கட்கும் பெரிதும் பயன்படுந் தன்மையுடையன. இவற்றில் காணப்படும் கற்பனை நயம் ஒப்புயர்வற்றதாகும்.

உலகின் தோற்றமும் ஒடுக்கமும் அம்மை அப்பன் விளையாட்டுகளாகக் கற்பனை செய்யப்படும் ஓர் அற்புத கவி மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழின் செங்கீரைப்பருவத்திலுண்டு, அதில் அம்மை கட்டிய சிறுவீட்டை ஐயன் அழித்தாற்போலுமென்ற கருத்து அழகாய் அடங்கியுள்ளது. குறித்த வீட்டுக்கு உலகைச் சூழ்ந்துள்ள வட்டமாமலை சுவராகவும், எட்டுத்திக்கு மலைகள் தூண்களாகவும், மேரு நடுதம்பமாகவும், அண்டகோளம் முகடாகவும் அமைந்துள்ளன. அவ்வீட்டினுள்ளே சூரியனும் சந்திரனும் விளக்குகளாகவும். பிரளய வெள்ளத்தில் கழுவப்பெறும் புவனங்கள் அங்கே அடுக்கப்பெற்றுள்ள பழய பாத்திரங்களாகவும், அக்கலங்களிலே உயிருள்ள உயிரற்ற படைப்புக்களெல்லாம் புது உணவாகவும் இருக்கின்றன. இந்தமுறையில் அம்மை பன்முறை வீடுகட்டி விளையாடுகிறாள். ஐயன் அதனைத் திரும்பவுந் திரும்பவும் அழித்தொழித்துப் பரவெளியிற் பித்தன்போல் திரிகிறான். அவனது திருக்கூத்தைக்கண்டதும் அம்மை சினமொழிந்து மகிழ்ந்து சிதறிய பொருள்களை எல்லாம் மறுபடியும் எடுத்துச் சேர்த்து பெரிய பழைய உலக வீட்டைச் செம்மை செய்கிறாள், இதுவே பாட்டின் சாரம். என்ன அழகிய கற்பனை! எவ்வளவு சித்தாந்த சாஸ்திர நுட்பம் அதில் அடங்கியுள்ளது? இனிப் பாட்டையே பார்ப்போம்:—

சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச்
சுவர்க்கா னிறுத்திமேருத்
தூணென்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற
வெற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கல
மெடுத்தடுக் கிப்புதுக்கூ
ழின்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை
யிழைத்திட வழித்தழித்தோர்
முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவு
முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூடமூடுஞ்
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே.



முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் இருந்தும் ஓர் உதாரணங்காட்டி இக்கட்டுரையை முடிப்போம். முருகப்பெருமானை குழந்தையின் குறும்புச்செயல் சிறுமியர் கையால் கட்டிவிளையாடும் சிறு வீடுகளைத் தன் காலால் அழித்தலாகும். இது எட்டாம் பர்வம். அடுத்த பருவத்தில் அவரது விளையாட்டு சிறுபறை முழக்குதலென அழைக்கப்படுகின்றது. அவர் முழக்கும் பறையின் ஒலியைப் பலர் பலவாறு கருதினர் என்கிறார் குமரகுருசுவாமிகள். மயில்கள் அந்த ஒலியை மேகமுழக்கமெனக் கருதி ஆடினவாம்; மடந்தையர் கடலொலியென எண்ணிக் காதலுணர்ச்சி கொண்டனராம்; அந்தணர்க்கு அது மறையொலியாகிக் களிப்பூட்டியதாம்; சிவாநுபூதிச்செல்வர்கள் பரநாதமாகப் பாவித்து உருகினராம்; விண்ணோர்க்கும் முனிவர்க்கும் வாணனின் குடமுழாவொலியாகவும் திருமாலின் மத்தள ஓசையாகவுந் தோன்றியதாம். முருகன்பாட்டையும் படித்து வாசகர்கள் இன்புற அதனைக் கீழே தருகின்றோம்;—

மழைமுகில் பிளிறு முழங்கென விரிசிறை
மடமயி லினமகவ
மால்கட லோலிடு மொலியென விரக
மடந்தையர் மனநெகிழப்
பழமறை யார்ப்பென வாகுதி வேட்டெழு
பண்ணவ ருண்மகிழப்
பரநா தத்தொலி யெனவனு பூதி
பலித்தவர் நெக்குருக
அழலவிர் சோதியெ மையனடஞ் செய
வாயிர மங்கையினோ
ரண்ண றுவைத்திடு குடமுழ வொடுசுட
ராழி யவன்கொட்டு
முழவென வமரரு முனிவரு மார்ப்ப
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே,

# திருக்கேதீஸ்வரநாதர் தோத்திரம்.

(நவாலியூர் சோ. நடராஜன்)

இராகம் சுருட்டி] [ஆதி தாளம்

பல்லவி

சித்தம் தெளியத் திருக்கே தீஸ்வரம்
சேவித்திடு மனமே —சித்தம்

அநுபல்லவி

பக்தி பண்ணி முன்னர் சுந்தரர் செந்தமிழ்
பாடித் துதித்த தலம் —சித்தம்

சரணம்

ஈழத் திருமணி மண்டலத்தே முன்னாள்
எண்டிசை நாட்டவரும்
வாழத் தவஞ்செய்து வந்து பணிபுரி
மாந்தைத் துறை யருகே —சித்தம்
வண்டுகள் பாட மயிலின மாட
வரிக்குயில் பண்பாட
தொண்டர் குழாம்மறை யோதிப் பணிந்திடத்
துன்பங்கள் தீர்க்குந் தலம் —சித்தம்

## திருக்கேதீஸ்வர கௌரி அம்மை தோத்திரம்.

(க. இ.)

ஆபி இராகம்] [ஆதி தாளம்

பல்லவி

கௌரியை மறவாதீர்—உங்கள்
கடமையில் தவறுதீர்—கேதீஸ்வரக்

அநுபல்லவி

மௌன முடனே யன்று மணாள னுடன் கூடி
மாதோட்ட நக ரோடு மறைந்து ஒடுங்கி நின்ற (கௌரி)

சரணம்

அண்ணா மலையி லென்றும், உண்ணா மலையாய் நிற்பாள்
அம்பலத் தாடல் காண, அம்மை சிவகாமியாகும் (கௌரி)
ஆலவாய்ப் பதி தனில், அங்கயற் கண்ணி யாவாள்
சீலமுடன் சேவிப் போரைச், சிவகதி சேர வைக்கும் (கௌரி)
காஞ்சிமா க்ஷேத் திரத்தில், காமாட்சி யம்மை யாவாள்
வாஞ்சையுடன் வந்திப் போர்க்கு, வரமருள் தேவி யாகும் (கௌ)
குற்றாலத் தலந் தனில்,குழல்வாய் மொழி யுமையாய்
உற்றார் பெற்றா ரில்லார்க், குறுதுணை தானே யாகும். (கௌரி)

# ஸ்திரீகளிடம் கிருஷ்ணபரமாத்மா காட்டிய தயாவீர மனப்பான்மை.

—:—;—

(ஸ்ரீமதி சுந்தரம்பாள் ராகவாச்சாரி)

பெண்மையின் பெருமையை நன்கறிந்த அவதார புருஷன் கிருஷ்ணபகவான். ஸ்திரீகளனைவரையும் சகோதரிகளாக பாவித்த பெரியோன், அச்சகோதரிகளது கற்பையும், நேர்மையையும் இடைவிடாது பாராட்டி ஆபத்து நேர்ந்தவிடத்து அபயமளித்து ரக்ஷித்தவர். குழந்தைமுதல் கிழவியுள்பட எல்லா ஸ்திரீகளிடமும் ஜாதிமத அந்தஸ்து பேதமின்றி அளவற்ற அன்பைக்காட்டியவர். அவர்களது சுகதுக்கங்களில் ஈடுபட்டுத் தனதாகவே எண்ணி அவர்களை நல்வழிப்படுத்தி மகிழ்ந்தவர்.

மிகக்கொடிய பாபஹேதுவான சூதாட்டத்தில் விதியின் வலியால் தருமபுத்திராதிகள் தோல்வியுற்று பதிவிரதாசிரோமணியான திரௌபதாதேவியை, அம்பலத்தில் மானபங்கப்படுத்தும் பொருட்டு, துர்மார்க்க வஞ்சகனான துரியோதனன் ஏவலால் அவன் தம்பி துகிலுரிய வாரம்பித்தகாலத்தில் ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! தீனபந்து! என்று புலம்பிய திரௌபதியை ரக்ஷித்த மஹானுபாவர் அல்லவா? சகல சொத்துக்களையும்வைத்துச் சூதாடியிழந்தபின் தன்னையே கடைசியில் பந்தையப்பொருளாக வைத்துச் சூதாட்டத்தில் தோல்வியடைந்தபொழுது திரௌபதி ஓரேமனதுடன் ஈசுவரனையே நம்பி, தனது ஆத்மஜோதியின் பலத்தைக் கடைப்பிடித்ததின் பலனாக, கற்புநிலை பங்கப்படாமல் இருந்ததுமன்றி, கவுரவர்கள் வேரோடு நாசமடையும்படியும் செய்தது சகோதரிகள் எல்லோரும் அறிந்த விஷயம். ஸ்திரீகளது நேர்மை பெருமையையும், அவரது பொறுமை பக்திசிரத்தையையும் வெகுவாகப்பாராட்டி உலகமக்கட்குக்காட்டி, ஆண்பிள்ளைகள் அபலையான ஸ்திரீகளிடத்து எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்பதை தனது (அவதார புருஷநிலையில்) நடத்தையால் விளக்கி மெய்ப்பித்துள்ளார். நமது சகோதரர்கள் அவ்வரிய சாதனைகளை மேற்கொண்டு நடத்தல் அவசியம். ஸ்திரீகளுக்கு சிருஷ்டியில் சௌந்தரியம், ரஸபாவம் முதலிய சரீரலாவண்ய மேம்பாடுகளை ஏற்படுத்தியுள்ள கடவுளின் உட்கருத்து, கேவலம் மிருகத்தன்மை

யான சிற்றின்ப ஆசையைத் திருப்திசெய்துகொள்ளும் பொருட்டேயல்ல அவ்வரிய குணவிசேஷங்களையும், சௌந்தரியத்தையும், ரஸானுபவம் செய்து மேன்மைப்படுத்தி, தயாவீரமெனும் பெரியதோர் மனப்பாங்குடன், ஸ்திரீகளனைவரையும் தமது தாய்மாராகவும், சகோதரிகளாகவும் நித்தியானுஷ்டானத்தில் பாவித்துப் பழகிவருவதற்கேயாம். இந்தச் சூக்குமமான மார்க்கத்தை அறியாது நமது சகோதரர்களில் உன்மத்தம்பிடித்த சில விடர்கள் சிற்றின்ப அலைச்சுழலில் உழன்று அறியாப்பருவ மடந்தைகளில் பலரது வாழ்க்கைகளைச் சிதைவுறச்செய்கிறது, உலகத்திற்கேயோர் பெரிய துர்ப்பாக்கியம். மோகாவேசப் பிசாசின் வலையினின்று விலகி, தங்கள் ஆத்மாவின் நிலையான சொரூபத்தையறிந்து தான் அக்கினி சாக்ஷியாக மணந்த ஸ்திரீயல்லாத மற்றைய ஸ்திரீகளனைவரையும், சிற்றின்ப இச்சை சிறிதும் கலக்கப்படாத உள்ளன்புடன் நேசித்து அவர்களது நேர்மை நிலையைப் பாதுகாப்பதே கடமையாக நமது சகோதரர்கள் நடப்பதற்கு கிருஷ்ண பரமாத்மாவின் அவதார புருஷவாழ்க்கையின் சம்பவங்கள் போதிய சான்றுகளாகும். கிருஷ்ண பரமாத்மா கோபிகாஸ்திரீகளுடன் ராஸக்கிரீடை முதலிய லீலைகளில் ஈடுபட்டிருந்ததை சிற்றின்பத்தின் பாற்பட்டதெனச் சில கசடர்கள் நினைப்பதும், கூறுவதும், அறியாமையின் விபரீதம். உண்மையில் பகவானது கிருபாவிபூதியை நாடி கோபிகள் பிரார்த்தித்து நடனமாடி அவரது திருவுள்ளத்தைத் திருப்தி செய்வித்ததை, தப்பான துறைகளில் வழிபட்டதாக எண்ணுகிறார்கள். ஞானமார்க்கம், பக்திமார்க்கம், கர்மமார்க்கம், இவை மூன்றுமே சர்வேஸ்வரனையடையப்போதிய சோபானங்கள். இம்மூன்றும் நமது நாட்டு லலிதக் கலைகளிலும், ஈசுவர வழிபாட்டுக்கேற்ற காவியங்கள், பாசுரங்களிலும், இராமாயணம், மஹாபாரதம், பகவத்கீதை முதலிய வேதப்பிரமாணமான காவியங்களிலும் தெளிவாக எடுத்து விளக்கப்பெற்றிருக்கின்றன. இத்தகைய பல நூல்களிலிருந்தும் வெளியாகும் தத்துவார்த்தத்தை யடிப்படையாகக்கொண்டு ஸ்திரீவியக்தியை உத்ப்ரேக்ஷையாகப்பிரேமை பாராட்டிப் பின்வருமாறு வழிபடுதல் சிறந்த தர்மம்,

“ஏ ஸ்திரீரத்தினமே எனது சகோதரியே! மிருகத்தனம் ஊடாடி நடமாடிவரும் இப்பூவுலகினைச் சிறிது திருத்தியமைத்து அலங்கரிக்க வல்லவளே! வளர்ச்சிக்கும், சுபிக்ஷத்துக்கும் நீயே

# பொதுநலத்தின் மாண்பு.

[வித்துவான் முருகசரவணபவன்]

“பிறர்க்கென வாழும் பெரியாரைச் சேருந்
துறக்கமுங் காணாச் சுகம்”

துறக்கமாவது சுவர்க்கம் (மோட்சம்) அதன் இன்பம் பெரிதுதான். அதைவிடப்பெரிய இன்பம் ஒன்றுள்ளது. அதுவேஎல்லா உயிர்களையும் தானென்றெண்ணி அன்புசெய்யும் ஆனந்தம். அந்த இன்பம் யாரைச்சேரும்? தன்னலம் விட்டுப் பிறர்நலமே போற்றி அறப்பணி செய்து வாழும் பெரியாரையே அந்த இன்பம் தானாக வந்தெய்தும். மலர்தலையுலகத்து வாழ்ந்தோர் பலருள், இன்று நம்மால் அறியப்படுவோர் சிலரே; ஒருவராலும் அறியப்படாது தாமரையிலை போல் மாய்ந்தோர் பலராவர்.

இவ்வாறு ஒரு சார்பாரால் அறியப்பெற்றும் மற்றொரு சார்பாரால் அறியப்பெறாதும் இருத்தற்குக் காரணம் காணலுறின் முன்னவரின் பிறர் நலங்கருதும் பெருநெறிவாழ்க்கையும், பின்னவரின் தம் நலங்கருதும் தாழ்நிலை வாழ்க்கையுமே ஏதுக்களாகும்.

பொதுநலம் கருதும் தன்மையுடையவர் தமர் நலத்தை நோக்காத பிறர் நலமாக வாழ்வதற்காகவே தாம்உயிர்வாழ்தலின் “உண்டாலம்ம” இவ்வுலகம், என்றார். அன்றியும் அவர் பிறர்க்கே உரியவர் ஆகின்றார். இவ்வாறு ஆதற்குக் காரணம்

“அன்பிலா ரெல்லாந் தமக்குரியர், அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு”

என்ற வள்ளுவர் வாக்கின்படி பிறர் யாவர்மாட்டும் கொண்ட அன்பேயாகும்.

மனிதன் தன்னைப் பூரணப்படுத்திக்கொண்டு மனிதசமுதாயம் இன்னலற்று இன்புறத்தொண்டு செய்தல்வேண்டும். வாழ்வு ஆறு பூரணவெள்ளத்தால் நிரம்பி, உயிர்செழிக்கப்பாய்ந்து அருட்கடலைச் சேர்ந்து பேரின்பமெய்தல் வேண்டும்.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

தான் காரணபூதம். லக்ஷணபூர்த்திக்கும் மனோரத பாபங்களுக்கும் நாகரீக முறைகளுக்கும் தாய்போன்றவள் நீயே. சலனச்சித்தம், சிற்றின்பநாட்டம் முதலிய பேய்களை ஓட்டியடித்து, தீயொழுக்கங்களின்றும் எங்களை நல்வழிப்படுத்தி, உள்ளன்புடன் உனது வர்க்கத்தை நேசிக்கச்செய்ய வல்லவளும் மனிதனை பேரின்பமடையச்செய்ய சக்தி வாய்ந்தவளும் நீயேதான்” என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் வாழ்க்கைச் சரித்திரத்திலிருந்தும் அவரது தத்துவ போதனைகளின்றும் நன்கு வெளியாகிறது,

# — "மனப் பயிற்சி" —

—:—:—

[வலியுல்லாஹ் கமாலீ]

பயிற்சிகளிலெல்லாம் மனப்பயிற்சி மனிதனுக்கு மிகமிக வேண்டுவதும், சிறந்ததுமாகும். உடற்பயிற்சியினால் உடம்பு எப்படி வலியுறுகிறதோ அப்படியே மனப்பயிற்சியினால் ஞான விளக்கம்—பகுத்தறிவு உறுதியடைகிறது. அம்மனப்பயிற்சியாவதென்ன? ஒருவர் நீந்தப்பழகவேண்டுமானால்; நீந்தவேண்டும், ஓடப்பழகவேண்டுமானால்; ஓடவேண்டும். போரிடப்பழகவேண்டுமானால் போரிடவேண்டும் அதேபோன்று மனப்பயிற்சிசெய்யவிரும்பினால், என்ன வேண்டும் நினைக்கவேண்டும், யோசிக்கவேண்டும், தியானிக்கவேண்டும், சிந்திக்கவேண்டும். எதை என்ற கேள்விக்குப் பதில்தான் ஞானோபதேசிகதீட்சிதனிடம் கிடைக்கப்பெறும் உயிர் நாத வடிவம்.

கிணற்றிலுள்ள நீரை மனிதன் இறைப்பதினால் கிணறு சுத்தமடைகின்றது, புதுநீர் பொங்குகிறது, தாகந்தீர்க்க உதவுகிறது, தனது கரங்களும் உறுதியடைகின்றன. அஃதேபோன்று தியானித்தல், நினைத்தல், சிந்தித்தல், திக்ருசெய்தல் ஆகியவற்றினால் மனம் விளைந்து முதிர்ச்சியடைந்துவிடுகிறது. மன உறுதியில் நிலைபெற்ற திருவடிவத்தை தியானித்து ஆன்ம உறுதி அடைந்துவிட்டவன், அவன் எல்லா சக்திகளையும் பெற்றுவிட்டான். உலகில் அவனை மகாத்மா என்றே சொல்லிவிடலாம் அதுபற்றி;

"உடையரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று" என்றும்
"உள்ளமுடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கிவிடும்"

என்றும் வள்ளுவநாயனார் கூறியுள்ளார். அவர் மாத்திரமல்ல:

"பல்லாட்டி சொல்லடைந்தோர் பாராள்வர்
எள்ளாட்டுஞ் செக்கேசிந்தை"

என பரிபூரணனந்த ஞானதேசிகரும் கூறியுள்ளார். மன உறுதி கொண்டோரை சாதாரண மனிதர்களோடு சேர்த்து எண்ணல் தவறு. அவர் தேவர்கட்கு ஒப்பாவர். ஏனெனில் உலகில் அவரினால் சாதிக்கமுடியாதது எதுவுமிராது. உண்மைப்பொருளினை உய்த்துணர்ந்தே திருவேன். எனச் சங்கற்பம்பூண்டு ஓயாதுளைத்த மகானை யாரே சாதாரணமனிதருள் சேர்த்துச் சொல்லவல்லவர்?



உலக வாழ்க்கையில்கூட மன உறுதி உள்ளவன் வெற்றி கொள்ளுகிறான். வாழ்க்கை ஓர் படகு இல்லறத்துணைவர்கள் படகோட்டிகள் மாய்கை உலகு ஓர்சாகரம். இந்த சமுத்திரத்தில் கிடக்கின்ற வாழ்க்கைப்படகை ஓட்டிச்செல்ல விரும்புவோர், போரில் வெற்றிபெறுவதற்காக உடற்பயிற்சி செய்து வெற்றி அடைவது போன்று, வாழ்க்கைப்படகை ஓட்ட மன உறுதியில் பழகிவரவேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்த முயல்வதே சிறந்த மனப்பயிற்சியாகும். அம்முயற்சி சில நாட்களில் சித்தி அடைய முடிந்ததன்று. அதற்கு நீண்டகாலமுயற்சி அவசியம். ஒவ்வொருமனிதனும் தன்தன் மனோ உறுதிக்கேற்றவாறு குறிப்பிடப்படும் காலவரம்பிற்குள் அந்நிலையை அடைதல் முடியும். இதற்கென்றே "சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கும் திறன் அரிது; சத்தாகி என் சிந்தை மிகுகுடிகொண்ட அறிவானதெய்வமே தேசோமயானந்தமே!" என தாயுமானாரும் கூறிப்போந்தார்.

மனோவன்மையைப்பொறுத்து மனோசக்திகள் விரைந்தோ தாமதித்தோ விகசிதம் அடைகின்றன. மனச்சாந்தியை ஒன்றுகூட்டி நாம் குறித்த காலத்தில் குறித்த விஷயத்தை சிந்திக்கச் செய்வதுதான் அரிதினுமரிது மனிதன் தான் நினைத்த எதையும் சாதித்துவிடுதல் இலகுவாக அமையினும் அது மனச்சித்துக்குரியதல்ல: ஒருமுகப்பட்ட உளைப்பின் மகிமையை உணர ஒரு உதாரணம் தருகின்றோம்.

ஒரு நீரோடையில் நிறைய நீரோடிக்கொண்டிருக்கின்றது. அதனால் எந்த அபாரமான சக்திகளையும் இயக்க முடியாமலிருக்கின்றது. ஓடையின் நடுவிலிருந்து ஒரு குளாயைப்பொருத்தி குளாயின் வழியாக வருகின்ற நீரினால் பிரமாண்டமான சக்கரத்தைச் சுழற்றி மின்சார இயந்திரத்தை இயக்குவதாற்கான சக்தியை உண்டுபண்ணிவிடலாம் அன்றோ? அதேபோன்று மனிதன் தன் நினைவு சிதைந்து போகாமல் ஒருமுகப்படுத்துவானாயின் அபூர்வ காரியாதிகளைச் செய்து முடிக்க சக்தி உடையவனாகிவிடுகிறான். ஒரேசமயத்தில் அனேக காரியங்களை செய்ய முயலுவானாயின் தன் சக்தியையும் வாழ்க்கைப் பலனையும் வீணாக்கின்றான். மன உறுதியற்ற எவனும் பெருங் கருமங்களைச் சாதித்துவிடமுடிகிறதில்லை.

"என்னால் முடியும்" என்னும் மந்திரத்தைவிட உயர்ந்த சக்தியுடைய மந்திரம் ஒன்றிருக்குமானால் "நான் அது" என்பதாகத் தானிருக்கமுடியும்.

---

# — மௌனம். —

—:-:—-:-:—

("துரியானந்தர்" பின்னலூர்)

திருவருணிலைபெற்று! முக்தராகவேண்டி ஜனகாதி நால்வர் மூன்றரைக்கோடிவருஷம் கல்லால விருக்ஷத்தினடியில் தென் முகச்சின் முத்திரையுடன் மௌனமாக வீற்றிருந்தருளிச் செய்த தக்ஷிணாமூர்த்தியின் முகத்தைப்பார்த்து ஜீவாத்மாவை பரமாத் மாவிற் பொருத்தி முக்தரானார்கள் என்பதை நோக்க மௌனத் தின் பெருமை இனிது விளங்கும்.

"மோனமென்பது ஞானவரம்பு" என்றும், "மௌனம் சர் வார்த்த சாதகம்" என்றும் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே மௌனம் ஒன்றினாலேயே இகபரமிரண்டிற்கும் வேண்டிய எண்ணுதற்கரிய அரும் பெரும் சித்தியடையலாமென்பது செவ் வனே விளங்குகின்றது. மௌனத்தில் வாக்கு மௌனமென்றும் காய மௌனமென்றும், மனோ மௌனமென்றும் மூன்றுவகைகள் உள்ளன. இம்மூன்றிலும் மனோ மௌனமே சாலச்சிறந்தது. ஆழ்ந்த மனோ மௌனத்தினாலேயே மிக்க மனோ வன்மையையும், ஆன்மப் பிரகாசத்தையும் அடையக்கூடும். இம் மௌனக் குகை யில் பிரவேசித்துச் செல்லும் வரையிற் சென்று, நிற்கும் வரையில் நின்று பெருநெறியைச் சாதித்தவர்க்கே மனது கவலையற்றுக் குளிர்ந்து உண்மை உணர்ச்சியடைவதுடன், அருட்சக்தி தெய்வ நிலைக்கு உயர்த்தியும், எதிர்பாராத எல்லாம் வல்ல பெரும் சித்தி யையும் அருள்விக்கும்,

மௌன நிலையிலிருப்போன் மனதைக் கண்ணாடிபோன்று மாசறச் சுத்தமாக வைத்துக்கொள்வான். இந்நிலையிலிருப்போ னைப் பார்த்தால் ஏழையைப்போலும், ஒருசக்தியற்றவனைப்போ லும் தோன்றுவான். இம் மௌனம் செய்யும் வேலையை வேறு எதுவும் செய்ய முடியாது. இத் தொழிலிலிருப்போன் உலகத் தைப் பகைக்கவாவது, வெறுக்கவாவது செய்யான். இம் மௌ னம் இவனுக்கேயன்றி உலகத்திற்கும் பெரிய நன்மையைச் செய் கிறது. இந்நிலையில் நிற்போனுக்கு அளவற்ற தன்னடக்கமும் பொறுமையும் தானே வந்தமையும்.



மௌனநிலையின் உயரிய உண்மையினை அடைய விரும்பு வோன் தர்க்க வாதங்களை விட்டுச் சொரூப அனுபவமுடைய பெரி யார் எழுதிய சாஸ்திரங்களைமாத்திரம் பார்க்கவேண்டும். அன் னான் அவற்றுட் கூறியவாறு அனுஷ்டித்தால் சகஜ நிஷ்டையெ னும் மௌனநிலை தானே கைவல்யமாகும். தைல தாரைபோல் தொடர்ந்த மௌன அப்பியாசமே நிருவிகற்ப நிஷ்டையாய் முடி யும். தத்துவ சாஸ்திர விசாரணை வாயிலாக நான் யார்? என் உள் ளம் யார்? என் ஞானம் யார்? என ஒவ்வொரு வஸ்துவையும் நன்றாகச் சோதித்து அவ்விசாரமெல்லாவற்றிற்கும் இருப்பிடம் மனமே என்று நிர்ணயித்து எதிரிட்டுத் தோன்றும் மனதை மாய் த்து அம்மனமிறந்த இடத்தை அறிந்து மனமிறந்த இடத்தில் விள ங்கும் வஸ்து பிர்ம்ம வஸ்துவெனத் தெளிந்து அகண்டாகாரமாய் எங்கும் நிறைந்தவனாய்த் தன்னையறிவன். எங்கும் வியாபகமான தன்னைத் தவிர வேறொன்றுமில்லாதவிடத்து எதனால் எதைப்பார் ப்பன்? யார் யாரை உபாசிப்பன்? மனமற்றுத் தானானவிடத்து மௌனமன்றி மற்றொன்றும் பெறுவதற்கில்லை.

ஜீவபோத சேட்டையின்றி ஊமை, செவிடு, குருடுபோன்று நினைப்பு, மறப்பு நீங்கி விழிப்போடு அணுவளவும் பாவனையெழாது காண்பான், காட்சி காணப்படு பொருளற்று உள்விழிப்பார்வை யினால் அறிவாகிய அகண்டாகார ஆன்மாவில் அசைவற்று அதிச யமின்றி நிற்பதே சமரச ஆனந்த மௌனமாகும்.

———

அன்பே அருட்பெருஞ்ஜோதி தயவே தனிப்பெருங்கருணை

**கடவுளை நம்பு**

| | |
|---|---|
| நம்பிக்கை உள்ள இடம் | அன்பு ஊறும் |
| அன்பு ஊறும் இடம் | சாந்தம் பொங்கும் |
| சாந்தம் பொங்கும் இடம் | இன்பம் பெருகும் |
| இன்பம் பெருகும் இடம் | ஞானம் வழியும் |
| ஞானம் வழியும் இடம் | அருள் ஒளிரும் |
| அருள் ஒளிரும் இடம் | கடவுள் தோன்றும் |
| கடவுள் தோன்றும் இடம் | வேண்டுவது ஒன்றுமில்லை. |

துரியானந்தர்

# திருவடி யாத்திரை.

"முத்து"

நாம் ஒருவரைக் காணும்போது அவர் ஆண்டவனது திருவடிகளைச் சேருதற்கு யாத்திரை செய்பவர் என்ற எண்ணமே எமது மனதில் முதல் உண்டாதல் வேண்டும். அப்படி உண்டாகுமிடத்து எமது மனதில் சாதி சமயமோ அன்றி வேறுஎது விதமான உயர்வு தாழ்வு எண்ணங்களோ உண்டாகமாட்டா, எமது வாழ்வின் நோக்கம் உயர்வாகிய பொருள் ஒன்றோடு சம்பந்தப்படும்போது அவற்றுக்கிடையிலுள்ள வேற்றுமையெல்லாம் மறைந்துவிடுகின்றன.

எங்களில் ஒரு கூட்டத்தார் சிவனடிபாதம்நோக்கி யாத்திரை செய்தோம். சிலர் ஒவ்வொரு அம்பலத்திலேயும் தங்கித்தங்கியே பிரயாணம்செய்தனர். ஒருசிலர் எந்த அம்பலத்திலும் தங்காது பிரயாணம் செய்தனர். வேறுசிலர் நடக்கமாட்டாதவர்களைத் தூக்கிக்கொண்டோ அவர்க்கு உதவிபுரிந்துகொண்டோ சென்றனர். இதேமாதிரியாகத்தான் மக்கள் எல்லோருமே யாத்திரை செய்கின்றனர். எங்கே? இறைவனது திருவடிநோக்கி. பக்குவமடைந்தோர் எவ்விடத்தும் தாமதியாது நேரேசென்றுகொண்டிருக்கின்றனர், மணிவாசகர்போன்ற பெருந்தகையாளர் அத்தகையோரே. ஒருசிலர் கிருகஸ்தாச் சிரமம்போன்ற அம்பலங்களில் தங்கி அப்பால் யாத்திரையைத் தொடங்குகின்றனர். இவ்வுண்மையை மனிதன் அறிந்தானாயின் இன்று உலகில் நடக்கும் அணுக்குண்டுச் சண்டையோ சாதிசமய நிறச் சண்டைகளோ நடக்கக் காரணமில்லை.

இறைவன் எங்கும் நிறைந்தவன், அவனை இந்நிறத்தன் இவ்வுருவினன் என எவராலும் கூறமுடியாது. பிரமவிட்டுணுக்களாலும் அறியமுடியாத அடிமுடியை உடையவனல்லவா? அப்படிப்பட்ட இறைவனை உளத்தில் வைத்துத் தியானிப்பதற்கு மனிதஉளத்திற்கு ஏதோ ஒரு உருவம் வேண்டியிருக்கிறது. அதன் பொருட்டு இறைவனுக்குப் பல உருவைக் கற்பித்தனர் பெரியோர். அவ்வுருவையும் முழுவதாகத் தியானிக்கமுடியுமோ எனின் அது முடியாத காரியமாகும். உருவை நினைக்கலாம். மனம் ஒருமைப்படுதற்கு மிக நுண்மையான தோரிடம் வேண்டும்.



துரோணாச்சாரியார் தன் மாணவர்களைப் பரீட்சிக்கிறார். மரத்திலுள்ள பறவையை குறிவைக்கும்படி துரியோதனனிடம் கூறுகிறார். இடைமறித்து துரியோதனா நீ எதைப்பார்க்கிறாய் பறவையைப் பார்க்கிறேன். வேறு எவற்றைப்பார்க்கிறாய் மரம் ஆகாயம் குருநாதர் எல்லோரையும் பார்க்கிறேன் என்கிறான். அர்ச்சுனனை அழைத்து குறி வைக்கும்படி கட்டளையிடுகிறார். அர்ச்சுனா நீ எதைப்பார்க்கிறாய் பறவையைப்பார்க்கிறேன். வேறு எதைப்பார்க்கிறாய் பறவையின் கழுத்தைமாத்திரம் பார்க்கிறேன். இன்னும் வேறு எவற்றைப் பார்க்கிறாய்! பறவையின் கழுத்திலுள்ள ஓர் புள்ளியை மாத்திரம்தான்பார்க்கிறேன் வேறு ஒன்றுமே தெரியவில்லை சுவாமி. பறவையைத் தெரியவில்லையா? இல்லை சுவாமி. அம்பை விடு என்கிறார். பறவை கீழே விழுகின்றது. அர்ச்சுனனுடைய குறி தவறாது இருப்பதற்கு எவ்விதம் நுண்மையானதோர் மனவொருமை வேண்டியிருந்ததோ அதேபோன்று சாதகனின் மனம் ஒருமையுறுவதற்கும் ஆண்டவனின் ஓர்பகுதி தேவையாகின்றது. அதைப்பெரியார் எல்லாரும் ஆண்டவனின் அடியெனஉரைத்தனர்.

வள்ளுவர் "நற்றாள் தொழாஅர் எனின்" எனவும்.

"மலர்மிசை ஏகினான் மாணடி" எனவும்

"அறவாழி அந்தணன் தாள்" எனவும்

"எண் குணத் தான் தாள்" எனவும்

"இறைவனடி சேராதார்" எனவும்

"தனக்குவமை யில்லாதான் தாள்" எனவும் கடவுள் வாழ்த்திலேயே இறைவன் பாதத்தைக் கூறியுள்ளார். 'நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்கிறார் ஒருவர், மனத்தில் ஆண்டவனின் பாதமே பதியவேண்டும். அதைப் பதிப்பதற்கு அவன் பாதத்தை இடையறாது தைலதாரைப்போல் நினைத்தல் வேண்டும். அப்படிப்பட்ட சாதனையினால் உளத்தில் இறைவனது பாதம் பதிந்துவிடுகிறது. சுந்தரர் ஓர் இடத்தில்;

"இவன் மற் றென்னடியானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்" என்கிறார்.

இதேசந்தர்ப்பத்தில் மங்கையாழ்வார்

"பின்னையென்றும் நின் திருவடி பிரியாவண்ணம்
எண்ணிய பேரருள் எனக்கும்

# திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணி.

மேற்படி திருப்பணிச்சபையின் ஆதரவில் ஓர் பகிரங்கக்கூட்டம் கொழும்பு நகரசபைமண்டபத்தில் செனேற்றர் திரு. C. குமாரசுவாமி அவர்கள் தலைமையில் 29-5-49 ஞாயிற்றுக்கிழமை கூடியது. யாழ்ப்பாணம், மாத்தறை. குருநாகல், கண்டி, நீர்கொழும்பு முதலான இடங்களிலிருந்து பிரதி நிதிகள் சமுகமளித்தனர்.

கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும் ஈழத்துச்சைவர்கள் செய்யவேண்டியுள்ள பெருங்கடமையைக்குறித்தும் தலைவர் தமது முன்னுரையில் விளக்கிய பின்னர், திரு. K. வைத்திய நாதனவர்கள் இலங்கைவாழ் சைவசமயிகள் எல்லாரும் அவர்களின் ஒரு மாத வருமானத்தை, சிறு சிறுதொகையாகவோ அல்லது ஒரு இரு முறையிலோ, இந்தச் சிவத்தொண்டிற்கு உதவுமாறு கேட்கப்பட வேண்டுமென்று ஓர் தீர்மானத்தைப் பிரேரித்தார் திரு. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் அதனை ஆமோதிக்க, தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. திருவாளர்கள். ஸ்பென்சர் இராசரத்தினம் (நீதவான்) K. கனகரத்தினம் M. P., V. குமாரசுவாமி M. P., லக்ஷ்மணன் செட்டியார், K. சண்முகம் (நியாயதுரந்தரர்), க, இராமச்சந்திரன் முதலியோரும் நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டனர்.

இத்திருப்பணிச்சபைக்கு ஆதரவளிக்க அநுராதபுரத்திலும், சலாபத்திலும், புத்தளத்திலும் முறையே 12-6-49, 18-6-49, 19-6-49 தேதிகளில் பகிரங்கக் கூட்டங்கள் நடைபெறுமென அறிகின்றோம்.

### திருப்பணி நிதிக்கணக்கு.

| | | |
|---|---|---|
| | சென்றமாச வெளியீட்டின்படி மொத்தம் | 15247-00 |
| 17 | திரு வ. அரியகுட்டியவர்களும் அவர் பாரியாரும் | 1001-00 |
| 18 | திரு. க, சுப்பிரமணியமவர்களும் அவர்பாரியாரும் | 500-00 |
| | மொத்தம் | 16748-00 |

# செய்தித் திரட்டு.

### சிறைச்சாலைகளில் வாரவழிபாடு.

திரு. M, S. திருவிளங்கமவர்களும் திரு. P. குமாரசுவாமி அவர்களும் எடுத்துக்கொண்ட நன் முயற்சி காரணமாக வெளிக் கடை' மஹரா ஆகிய இரண்டு சிறைச்சாலைகளிலுள்ள இந்துக் கைதிகளால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூட்டுப் பிரா ர்த்தனைகள் நடத்தப்படுகின்றன இதில் பங்கெடுக்கும் பாக்கியம் பெற்ற சாது ஸ்ரீ முருகதாஸரும், பாலயோகி ஸ்ரீ ராமதாஸரும், "ஆத்மஜோதி" ஆசிரியரும் தங்கள் வாழ்வில் இதுபோன்ற அட க்கமான, ஆடம்பரமற்ற, மகத்தான ஆத்மீக சேவையைக் கண்ட தில்லையென உணர்ச்சியுடன் உரைத்தனர். இதுபோன்ற அரிய விஷயங்களில் இலங்கையே இந்தியாவுக்கு முன்மாதிரி காட்டிவருகின்றதெனலாம்.

### பொல்லனறுவாவில் சைவப்பிரசாரம்

ஓர் நாட்டின் சுதந்திரம் அதின் அரசியல், பொருளாதார, சமுதாயத்துறைகளில் முடிவடைவதில்லை. சமயத்துறையிலும் அது பழமையைப் போற்றினால்தான் கிடைத்த விடுதலை பூரணமாகும். சென்ற ஞாயிற்றுக்கிழமை (5-6-49) பொல்லனறுவையில் நடந்த ஓர் புதுநிகழ்ச்சி சைவமக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியளிப்பதாகும். பல நூற்றுண்டுகளாகத் தேடுவாரின்றிக் காட்டுள் மறைந்துகிடந்த சிவன் கோயிலில் அபிஷேகத்தோடு ஆராதனை நடந்தது, இது இரண்டாம் நம்பர் சிவன்கோயில். இதில் மாத்திரமே தூபியும் மூலஸ்தானமும் இன்னும் அழியாமல் இருக்கின்றன. அரசினரின் உதவியால் சிதைவுற்ற பாகம் சீக்கிரம் திருத்தப்படுமென எதிர்பார்க்கின்றோம் வழிபடுவதற்கு உத்தரவு கொடுத்ததே அவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. ஆனி உத்தரத்தன்று விசேடபூசையும், பஜனையும், உபந்நியாசமும் நடைபெறுமென அறிகின்றோம். இந்தச் சிவத்தொண்டில் ஈடுபட்டுள்ள திரு. A. தையல்பாகர் அவர்கட்கும் திரு, S. விசுவலிங்கம் அவர்கட்கும் சைவஉலகின் நன்றி உரித்தாகுக! திருவருள் அவர்கட்கு ஊக்கமளித்துத் துணைநிற்குமென்பது நிச்சயம்,

## சுவாமி விபுலாநந்த அடிகளின் நினைவுமண்டபத் திறப்புவிழா.

ஈழமணி விபுலாநந்த அடிகளாருக்கு ஞாபகார்த்தமண்டபம் அக்கரைப்பற்றில் எழுப்பப்பட்டது. அடிகளார் துறவு பூண்ட 25 ஆண்டு நிறைவுநாளான சித்திரா பௌர்ணமி (12-5-49) அன்று, கோயமுத்தூர் இராமக்கிருஷ்ண வித்யாலய காரியதரிசியான சுவாமி நிஷ்காமாநந்தா அவர்கள் மண்டபத்தைத் திறந்து வைத்தார்கள். பல அறிஞர்கள் அடிகளாரது சேவை, துறவு, ஆற்றல், ஆராய்ச்சி முதலிய திறன்களை எடுத்துக் கூறினர். திரளான மக்கள் விழாவுக்கு விஜயம் செய்தனர்.

---

245ம் பக்கத் தொடர்ச்சி.

அன்னதாகு மென்றடியிணை அடைந்தேன்'' என்கிறார். சுருக்கமாகச்சொன்னால் இறைவனது அடியறியாத் தமிழ்ப்பாடலடியே கிடையாது. இறைவனடியை நினையாத தமிழ்ப்புலவனே கிடையாது. படிப்போர் நாஸ்திகராயினும் இறைவனடியை உண்டென்று நினைந்து வெளியே இல்லையென்று கூறுகின்றனர். இது அவனது திருவடியாத்திரையில் நாம் காணும் ஓர் அதிசயமாகும்.

---

### வந்தவள் யார்?

(சாதகன்)

ஆற்றோரம் மணல்மேடை மீதமர்ந்தேன்
அழகாகக் குயிலொன்று இசைபரப்பி
நாற்றிசையும் கிளை விரித்த நாவலின்மேல்
நயமாக உட்கார்ந்து இருந்ததுவே
வேற்றிசையே கேளாது லயித்திருந்தேன்
வெள்ளாடை உடுத்திருந்தாள் மாதொருத்தி
காற்றிடையே சொலிப்போனாள் கந்தனுமே
வரும்வழிதான் இதுவே யென்று

## அன்பர்களுக்கு.

1 ஆத்மஜோதி சம்பந்தமாக கடிதம் எழுதும் அன்பர்கள் தயவு செய்து தங்கள் சந்தா இலக்கத்தையும் குறித்து எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2 இந்தியாவிலிருந்து சந்தா அனுப்பும் அன்பர்கள் தங்கள் தெளிவான விலாசத்துடன் பிறம்பான கடிதம் ஒன்றும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

3 ஜோதியின் நோக்கத்திற்கு மாறுபடாதவகையில் மக்களுக்கு பயன்படக்கூடியதாக விஷயதானம் செய்வோரது விஷயங்களைச் ஜோதி மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும். இந்தமாசத்தில் அனுப்பப்பட்ட விஷயம் இந்தமாசத்திலோ அன்றி அடுத்த மாசத்திலோ வெளிவந்துவிடுமென எதிர்பார்த்திருக்கவேண்டாம். சில விஷயங்கள் ஆறுமாசத்தின் பின்னும் வெளிவரலாம். தாங்கள் அனுப்பிய விஷயம் தேவையானோர் தகுந்த தபால் முத்திரையுடன் எழுதினால் அவர்களுக்கு அவை திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

---

### வந்தவள் யார்?

(சாதகன்)

அந்தவழி பார்த்திருந்த அடியேனும்
அதிகநாள் அவ்விடமே அலைந்திருந்தேன்
எந்தவழி பார்த்தாலும் என்முருகன்
என்கிட்ட வாரானென் றறிந்தேன்
சொந்தவழி நாடிச் சோலையி
னுட்புகுந்தேன் சொன்னவளைக் காணேன்
எந்தனிலை யறியாது எல்லாரும்
சிரித்தார் என்செய்வேன் அன்னே.

---

### அன்பே சிவம்.

| | |
|---|---|
| தேகம் | அநித்தியம் |
| மரணம் | நிச்சயம் |
| ஆண்டவன் | அடியை |
| மறவாதிரு | மனமே! |

Registered in the G. P. O. as News Paper.


# ANANTHASTRAMA BOOK DEPOT,

Kandy Road, CHAVAKACHCHERI.

## ஆனந்தாஸ்ரமபுத்தகசாலை,

புத்தகம், படம், கண்ணாடி வியாபாரம்

கண்டி ரோட், சாவகச்சேரி.

இப்புத்தகசாலையில் பலவிதமான படங்கள், கண்ணாடிகள் பெரியோர்களின் அரும் பெரும் நூல்கள், சுவாமி சுத்தானந்தர், பகவான் ரமணமகரிஷி, சுவாமி ராமதாஸ், அன்னை கிருஷ்ணபாய், அரவிந்தகோஷ் இன்னும் அனேகம் பெரியோர்களின் புத்தகங்கள் மிகவும் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் வியாபார நோக்கம் ஆனந்தாஸ்ரம முன்னேற்றத்திற் காகவென்பதை அன்பர்கள் யாபேருக்கும் அறியத்தருகிறோம். எனவே, அன்பர்கள் யாவரும் எம்மை ஆதரிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்

சாவகச்சேரி.
22-3-49

S. T. S. சிவநேசன்.
ஆச்சிரமத் தொண்டன்.

---

## வெள்ளிவிழா மணிமலர்.

சுவாமிகளின் பற்றற்ற சேவையைத் தமிழ்மக்களுக்கு நினைவூட்டும் இனியதோர் மலர்.

விலை ரூபா ஒன்று. விலை ரூபா ஒன்று.

கிடைக்குமிடம்:

தலைமை ஆசிரியர்,
இராமகிருஷ்ண வித்யாலயம்.
அக்கரைப்பற்று, E. P. சிலோன்.

---

**மார்க்கபந்து** இனியதோர் செந்தமிழ் மாதப்பத்திரிகை. பெரும்பகுதியும் தெய்வீக விஷயங்களையே அடிப்படையாகக்கொண்டு நடைபெறுவது.

வருடச்சந்தா ரூபா 4-00

P. S. V. சுவாமி, B. A., L. T.
130, பெரியதெரு, ரிறிப்பிளிக்கேன், மட்ருஸ்.



கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.

பதிப்பாசிரியர், நா. முத்தையா, 'ஆத்மஜோதி' நிலயம், நாவலப்பிட்டி, சிலோன்.

நாவலப்பிட்டி [illegible] பதிப்பித்தது. 14-6-49. 2000 பிரதிகள்.